[2nd November 1962

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

காடுகள் (உளுந்தூர்பேட்டை)

** 1136 கேள்வி.—கு. கோபால கவுண்டர்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) உளுந்தூர்பேட்டை வட்டாரத்திலிருக்கும் காடுகளை வெட்டிச் செல்ல, கண்ட்ராக்டுக்கு விடப்பட்டதா ?

(இ) அதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த மொத்த தொகை எவ்வளவு ?

(உ) எவ்வளவு காலம்வரை கண்ட்ராக்டர்கள் மரங்களை வெட்டிச் செல்லும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம், ஐயா.

(இ) 1957-58-லிருந்து 1962-63 வரை கிடைத்த தொகை ரூ. 11,177.

(உ) ஒவ்வொரு வருடமும் எட்டு மாதங்கள்—அதாவது ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நவம்பர் 30-ம் தேதி வரை.

Text Books (Standardization)

* 1137 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the progress made so far regarding standardization of text books for the primary school classes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Text books in English for Standards V, VI and VII; Text books in Tamil, Telugu, Malayalam, Urudu and Non-detailed Text-Books in English, Tamil, Telugu, Malayalam and Urudu for Standard VII have been published by the Government so far.

விசாரணைக் கைதி (மரணம்)

** 1138 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தின் விலைவாசி குறைப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக் கைதியாக மதுரை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த எவரேனும் மரணமடைந்தாரா ?

(இ) அப்படியானால், அவர் இறந்ததின் காரணமென்ன ?

2nd November 1962]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) இல்லை. ரிமாண்ட் கைதி நெ. 510, பொற்செழியன் என்பவர் ஜாமீனில் விடுதலை செய்யப் பட்டு 23—8—1962 இரவு 10-30 மணிக்கு மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் இறந்துபோனூர்.

(இ) குடல் புண் சுரம் கண்டு இரத்தம் வெளிப்பட்டதன் (Enteric with Haemorrhage) காரணமாக அந்தக் கைதி இறந்து போனூர்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இறந்துபட்ட பொற்செழியன் என்ற திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர் தனக்கு வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், ஆகையால் தன்னை ஜாமீனில் விடவேண்டுமென்றும் கோர்ட்டிலே மனுக் கொடுத்த சமயத்தில் அரசாங்கத்தரப்பில் இருந்து அவருக்கு ஜாமீனில் விடுதலை அளிக் கக்கூடாது என்று அரசாங்கம் வற்புறுத்தியது உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: என்னிடம் இருக்கும் தகவல் பிரகாரம்—அவருக்கு வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டது என்று தெரிந்ததும் முதலில் ஜெயில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப் பெற்றது. அப்புறம் மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார். உடனடியாக அவரது உறவினர்களுக்கு இதுபற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் ஜாமீனில் விடுதலை கோரிய போது விடுதலையும் அளிக்கப்பட்டு, அத்தகவல் அவருக்கு ஆஸ்பத் திரியில் தெரிவிக்கப்பட்டது. அவர் விடுதலை செய்யப்பட்ட 23-ம் தேதி அன்று இரவுதான் இறந்தார்.

திரு. மு. கருணாநிதி: ஜெயில் ஆஸ்பத்திரியில் காலத்தில் தக்க சிகிச்சைகள் செய்யாத காரணத்தால்தான் அவருடைய உடல் நிலை மோசமாயிற்று என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு ஒன்றும் தகவல் இல்லை. ஜெயில் ஆஸ்பத்திரியில் எவ்வளவு தூரம் சிகிச்சை செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யப்பட்டது. பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டியதின் அவசியத்தை உணர்ந்துதான், அங் கிருந்து உடனடியாக மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு அவரை அனுப்பினூர்கள்.

திரு. இராம அரங்கண்ணல்: அவருக்கு டைஃபாய்டு காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறதென்று தெரிந்திருந்தும் அவரை ஏன் உடனடி யாக மருத்துவ மனையில் சேர்க்கவில்லை?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சிறை ஆஸ்பத்திரியில் முதலில் சிகிச்சை பெற்றூர். அதற்குப் பிறகு எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

திரு. எஸ். மாதவன்: மதுரை மத்திய சிறையில் 'கப்பாஸிடி' க்கு மேலாக கைதிகளை அடைத்து வைத்திருந்ததால் சுகாதாரக் குறைவு ஏற்பட்டு, அதன் காரணத்தால்தான் பொற் செழியன் என்ற தோழருக்கு இந்தக் கதி ஏற்பட்டது என்பதை அரசாங்கம் உணருகிறதா?

[2nd November 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதுவரையுள்ள வைத்திய ஆராய்ச்சியில், 'கூட்டம் அதிகமாக இருந்தால் இம்மாதிரி காய்ச்சல் வரும்' என்று கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம்: அவர் எப்போது கைது செய்யப்பட்டார்? அவர் பேரில் சாா்ஜ்ஷீட் எப்போது போடப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆகஸ்டு 3-ம் தேதி அவர் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டார். ஆகஸ்டு 17-ந் தேதி ஜெயில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

Marine Diesel Engine Factory

* 1139 *Q.*—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Marine Diesel Engine Factory in the State; and

(*b*) if so, when and where?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) & (*b*) Government of India have under consideration a proposal to establish an industrial undertaking at Ernavur for the manufacture of marine diesel engines.

திரு. எஸ். மாதவன்: இதற்குச் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு? அதிலே மரைன் டீஸல் இன்ஜின்களைத் தவிர வேறு என்ன என்ன பொருள்களைத் தயாரிப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: செலவு எவ்வளவு என்பதற்கு மத்திய சர்க்காரைக் கேட்கவேண்டும். அது மத்திய சர்க்கார் திட்டம். டீஸல் இன்ஜின் தவிர, இன்னும் 'ஸ்மால் நேவல் க்ராஃப்ட்' தயார் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

Gold (Dharmapuri taluk)

* 1140 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey for gold was conducted in Suppergatta near Nekkundhi in Dharmapuri taluk in 1961; and

(*b*) if so, the results thereof?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) & (*b*) The area around Nekkundhi in Dharmapuri taluk was mapped by the Geological Survey of India during 1961–62. No occurrence of gold in the vicinity of Suppergatta was observed.